## லங்கா சோல்ற் லிமிடட் கம்பனி – 2017

லங்கா சோல்ற் லிமிடட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) மீளாய்வாண்டின் போது முன்னைய இரண்டு ஆண்டுகளில் தென் மாகாண சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா. 27,828,598 பெறுமதியான கனியவள வரியினை மீள அறவிடுவதற்காக அம் மாகாண சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளை அடிப்படையாக கொண்டு 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டிய கனியவள வரியானது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதியப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டது. எவ்வாறாயினும் அவ் நிதியினை கம்பனியானது மீள அறவிட்டுக் கொள்வதற்கான சான்றுறுதித்தன்மை கிடையாது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட உப்புக்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் வெளிநபர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.283,803,105 பெறுமதியான தொழிற்சாலை உப்புக்கள் 17,524 மெட்ரிக் தொன் தொகையினை 2017 திசெம்பர் 31 ஆம் திகதியின் இறுதி இருப்பினுள் உட்படுத்தப்பட்டிருந்தது. உப்புக்கள் தரத்தில் குறைவானது என்று இராசாயன பரிசோதனையில் முடிவாக இருந்த இத் தொகை விற்பனை செய்வதற்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ பயன்படுத்தப்பட முடியாது என இருந்த போதிலும் அவற்றினை அகற்றுவதற்கான செலவினம் தொடர்பாக நிதிக்கூற்றில் மானியங்கள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியமங்களின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அறிக்கையிடல் திகதியின் போது 12 மாத கால முதிர்வுக்காலமுடைய நிதிச் சொத்துக்கள் நடைமுறைச்சொத்துக்களின் கீழும் மற்றும் கணக்கீட்டு வருடத்தில் 12 மாத காலத்திற்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினையுடைய நிதிச்சொத்துக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும் ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்ச்சிக்காலத்தினையுடைய ரூபா. 241,336,993 பெறுமதியான நிலையான வைப்புக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் வினைத்திறன்கள் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிரயம் ரூபா. 142,975,659 ஆன சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட போதும் அவை தற்பொழுதும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் மதிப்பீடு செய்யப்பட்ட தவறுகளை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 10 ஆம் அத்தியாயத்தின் 10.15 மற்றும் 10.18 ஆம் பிரிவின் பிரகாரம் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்கீட்டு நியமங்களின் 20 ஆம் அத்தியாயத்தின் 20.13 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 29,856,170 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் மற்றும் கையினால் இயங்கும் உழவு இயந்திரங்கள் என்பன குத்தகைச் சொத்துக்கணக்கில் காட்டப்பட வேண்டும் எனினும் அவை ஆதனம், பொறி இயந்திர சொத்துக்கணக்கில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) நியமங்களின் 29 ஆம் அத்தியாயத்தின் 29.16 பிரிவின் பிரகாரம் பிற்போடப்பட்ட வரியின் அடிப்படையில் இனங்காணப்பட்ட வரி விலக்களிக்கப்பட்ட அனைத்தும் குறுகியகால வேறுபாடுகள் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். இருப்பினும் கம்பனியினால் தீர்மானிக்கப்பட்ட பிற்போடப்பட்ட வரி சொத்துக்களில் மானியம் மற்றும் உதவிக்கொடுப்பனவுகளில் குறைக்கப்பட்டு குறுகிய கால வேறுபாடாக காணப்பட்ட போதிலும் கம்பனியானது பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பாக ரூபா.9,945,892 பெறுமதியினால் குறைத்துக் கட்டியதனால் பிற்போடப்பட்ட வரி வருமானமானது இத்தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) கம்பனிக் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் பொறி மற்றும் இயந்திரத்தின் வருடாந்த பெறுமானத் தேய்வு வீதம் 10 சதவீதம் பொறி இயந்திரத்தின் கீழ் காணப்பட்ட மோட்டர் இயந்திரம் மற்றும் குழாய்கள் மற்றும் உதிரிகள் (Pumps & Accessories) என்பன 20 சதவீத்தினால் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வு ரூபா. 1,255,304 ஆக அதிகரித்து காணப்பட்டதனால் கம்பனியின் சொத்துக்களின் பெறுமதியானது இப்பெறுமதியினால் குறைவடைந்து காணப்பட்டுள்ளது.

(ஏ) கம்பனியின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடையுடன் தொடர்புடைய செலவினமாக குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் இவ் வருட நன்கொடையாக பெற்றுக் கொண்ட தொகை ஏனைய வருமானத்தினுள் காட்டப்பட வேண்டும். எனினும் ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா. 4,259,917 பெறுமதியுடைய நன்கொடை நிதியானது தொடர்ந்து நீண்ட காலமாக நிதிக்கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களில் காட்டப்பட்டுள்ளன.

(ஐ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதி கம்பனி நிதிக்கூற்றினைத் தயாரித்த போது உப்புக்களின் இருப்பின் பௌதீக கணக்கெடுப்புப் பெறுமதியினைக் கருத்தில் கொள்ளாமல் இருப்பின் புத்தகப் பெறுமதியினைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டதனால் 2017 ஆம் ஆண்டில் கம்பனியின் இலாபம் அதிகரித்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் கம்பனியின் நடைமுறை சொத்துக்களும் ரூபா. 186,446,426 இனால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தன.

(ஒ) கம்பனியின் 2017 ஆம் ஆண்டிற்கான தேச கட்டுமான வரியின் பெறுமதியான ரூபா. 29,999,726 ஆனது விற்பனை செலவினத்திற்குள் காட்டப்பட வேண்டியதனை மொத்த விற்பனை வருமானத்தின் கீழ் கழித்து வருமான செலவினக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியின் போது வெற்றுப்பொதியிடல் பைக்கட்டின் பௌதீக கணக்கெடுப்பு பெறுமதிக்கும் இருப்புப் பேரேட்டில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் இடையில் ரூபா. 59,067 வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஔ) கீழே குறிப்பிடப்படுகின்ற ஒவ்வொரு கணக்கீட்டு விடயங்களுக்கு கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை.

| | **கணக்கீட்டு விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| (i) | ஓப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவு (CECB) | 38,339,359 | சான்றுறுதிப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் பொருத்தமான நபர்களின் மிகுதி தொகையினை உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (ii) | ஏனைய வைப்புக்களுக்கான கொடுப்பனவுகள் | | சான்றுறுதிப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் வயதுப்பகுப்பாய்வுகள் |
| | • PERC இருந்து பெறப்பட்ட நிதி | 1,649,500 | |
| | • வரிக்கொடுப்பனவு | 1,073,837 | |
| (iii) | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் | | |
| | • மீளளிக்கப்படாத | 3,632,645 | |

வேண்டிய வைப்புக்கள்

(iv) மானியங்கள் மற்றும் உதவிக்கொடுப்பனவுகள் (ICCIDD இடமிருந்து பெறப்பட்ட நிதி) 35,521,037

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து லங்கா சோல்ற் லிமிடட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமாவது:

- எனது கணக்காய்விற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், எனது பிரிசோதனைகளிலிருந்து இது வரை தென்படுகின்றவாறு கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவான தேறியலாபமாக ரூபா.324,253,841 இருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கான தேறியலாபமாக ரூபா.697,848,617 இருந்தன. அதன்படி நிதி விளைவுகளை ஒப்பிடும் போது ரூபா.373,594,776 ஆக குறைவடைந்து காணப்படுகின்றது. மீளாய்வாண்டில் விற்பனை வருவாயாக ரூபா.437,358,223 காணப்படுவதுடன் விற்பனைக்கிரயமானது ரூபா.110,500,299இனால் குறைவடைந்ததின் காரணமாக இலாபமானது அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 3 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டின் தேறிய இலாபமாக ரூபா.75,108,000 இருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் தேறிய இலாபமானது ரூபா.324,254,000 அதிகரித்திருந்தது. ஊழியர் நன்கொடைகள், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான தேய்மானம் மற்றும் அரசாங்க வரி என்பன 2014 ஆம் ஆண்டில் ரூபா.436,050,000 ஆகவும் 2017 ஆண்டில் ரூபா.1,223,815,000 ஆகவும் பங்களிப்பினைக் கொண்டிருந்தன.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | 2017 | 2016 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 38.67 | 58.58 |
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 22.14 | 36.69 |
| பங்கொன்றிற்கான உழைப்புக்கள் (ரூபா.) | 92.64 | 199.38 |
| ஊழியரொருவருக்கான வருமானம் (ரூபா.) | 880,269 | 1,652,585 |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.78 | 0.74 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.4 | 0.3 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனை செலவின அதிகரிப்பின் காரணமாக 2016 ஆம் ஆண்டினை 2017 ஆம் ஆண்டின் மொத்த இலாபத்துடன் ஒப்பிடும் போது மொத்த இலாப விகிதமானது 20 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் தேறிய இலாப விகிதமானது 15 சதவீதத்தினமாக குறைவடைந்திருந்தது. கம்பனியின் விநியோகச் செலவுகள், நிர்வாகச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் அதிகரித்தாமையே குறைவுக்கான முக்கிய காரணமாக அமைந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் கம்பனியின் வரிக்குப்பின் தேறிய இலாபத்தினை 2016 ஆண்டுடன் ஒப்பிடுவதன் காரணமாக பங்கொன்றுக்கான உழைப்புக்கள் ரூபா.106.74 இனால் குறைவடைந்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டினை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது ஊழியரொருவருக்கான வருமானது ரூபா.772,316 இனால் குறைவடைந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 47 சதவீதமான பற்றாக்குறையொன்றினை பிரதிபலிக்கின்றது.

(ஈ) 2016 ஆம் ஆண்டினை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்ட போது கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களின் விகிதமானது 1.04 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் விரைவுச் சொத்துக்கள் விகிதமானது 0.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும் கம்பனியின் செயற்பாட்டு மூலதனமானது அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் விற்பனை விநியோகச் செலவினத்திலுள்ள விளம்பரச் செலவினமானது ரூபா.25,984,581 ஆகவும் விற்பனை இலக்கு செலவினமானது ரூபா.25,639,398 ஆகவும் காணப்பட்டதனால் விற்பனை வருமானமானது 23 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதுடன் மீளாய்வாண்டில் விநியோகச் செலவினத்தினுள் உள்ள சம்பளம் மற்றும் கூலிச் செலவினமானது 31 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 3.3 கம்பனிக்கு எதிராக அல்லது தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான நிகழ்வுகள்

வருடாந்த இலாபத்தில் 0.5 சதவீதமானது கனியவள வரியாக அறவிடுவது தொடர்பாக மாகாண சபை வரி ஆணையாளர் (தென் மாகாணம்) மற்றும் கனியவள நில அகழ்வு ஆராய்ச்சி அலுவலக பணிப்பாளர்க்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது மற்றும் கம்பனியின் முன்னைய ஊழியர்கள் 05 பேருக்கு எதிராக ஒழுக்காற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக கம்பனிக்கு எதிராக ஊழியர்களினால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு திட்டத்தின் படி மதிப்பீடு செய்வதற்கான செயலாற்றல் அறிக்கையானது கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியினால் கொள்வனவு செய்யப்பட்ட உப்பு மற்றும் ஏனைய பொருட்கள் சேவைகள் தொடர்பாக எந்தவொரு பெறுகைத் திட்டங்கள் மற்றும் பெறுகை அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கம்பனி உப்பு தொழிற்சாலையின் ஆவணங்களை பேணும் பொழுது உழுவு இயந்திரத்தின் மூலம் நிறையினை அளவிட்டுக் கொண்டு நாளாந்த பெறுகை அட்டையினை பதிவு செய்வதுடன் உற்பத்தி செய்யும் இடத்திற்கு உப்புத் தொகையை வழங்கும் பொழுது நிறையிடல் தராசு மூலம் நிறையினை அளவு செய்து அத்தொகை வழங்கப்பட்டதாக பதிவு செய்யப்படும். அங்கு ஏற்பட்ட வேறுபாடுகள் தொழிற்சாலை உப்பில் விரயமாக இனங்காணப்பட்டிருந்தது. மாதாந்த விற்பனைகள் மற்றும் இருப்பு பேரேட்டின் படி 2017 ஆம் ஆண்டினுள் 6614 மெட்ரிக் தொன் உப்புக்கள் விரயமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் அவை 2017 திசெம்பர் 31 ஆம் திகதி தொழிற்சாலை உப்புக்களின் தொகையில் 10 சதவீதமாக காணப்பட்டது. தொழிற்சாலை உப்புக்களின் விரயங்களை அடையாளம் காண்பதற்கு சரியான முறையினை கம்பனி பின்பற்றாமையினால் மேலுள்ள விதத்தில் இனங்காணப்பட்ட விரயங்கள் தொழிற்சாலை உப்புக்களின் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் என்பன பதிவேட்டடில் இரண்டு விதமாக பதியப்பட்டதனால் ஏற்பட்ட வேறுபாடுகள் சரியாக ஏற்பட்ட விரயமா என்பது அடையாளம் காணமுடியாதுள்ளன.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கோஹோலங்காவில் உள்ள 20 ஏக்கர் காணியில் அமைக்கப்படுகின்ற நீராவி தாங்கி செயற்றிட்டத்திற்கான கட்டட அமைப்பு வேலைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சரியானமுறையில் கட்டடத்தினை அமைப்பது தொடர்பான செயற்பாடுகளினை வெளிநபர்களை கொண்டு செய்யப்பட்டதுடன் அதற்கு முறையான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மிகுதிப்பணத்திற்காக நீராவி தாங்கியினை அமைக்கும் பொழுது வெளியேற்றப்பட்ட மணல்கள் மற்றும் மண்கள் என்பன சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு

வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் அளவுகள் பற்றி சரியான தீர்வுக்கு வந்திருக்கவில்லை.

(ii) 2007 ஒக்டோபர் 03 திகதியிடப்பட்ட வேலை நியமனக் கடிதத்தின் படி சந்தைப் பெறுமதிக்கு குறைந்த பெறுமதியின் அடிப்படையில் ஒரு கியூப் மணலுக்காக ரூபா. 1,500 உம் மற்றும் ஒரு கியூப் மண்ணுக்காக ரூபா. 200 என்ற அடிப்படையில் ஒப்பந்தகாரரினால் மணல் மற்றும் மண்கள் அகற்றப்பட்டதுடன் ஒப்பந்தகாரரினால் அகற்றப்பட்ட மண், மணல் மற்றும் ஏனைய பொருட்கள் தொடர்பான எந்தவிதமான பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கபட்டன.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டு கம்பனியின் நிதிக்கூற்றில் இராசயனச் சொத்துக்களின் கீழ் காணப்படுகின்ற மஹலேவாயா மற்றும் பூந்தல நிலையங்களினால் மேற்கொள்ளப்பட்ட தென்னை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் மற்றும் ஊழியர்களுக்கான செலவினமாக ரூபா.271,469 மற்றும் ரூபா.7,444,817 ஆக காணப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் போது தென்னைப் பயிர்செய்கையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானமாக ரூபா. 198,900 ஆக காணப்பட்ட போதிலும் இத் தென்னைப் பயிர்ச்செய்கைக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட செலவினங்களின் மிகையானது சிக்கனமற்ற கொடுப்பனவாக காணப்படுகின்றது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்குரிய வரியினை மஹலேவாயா நிலையம் செலுத்த தவறியமையினால் 2017 ஆம் ஆண்டில் தண்டப்பணமாக ரூபா.737,100 செலுத்தப்பட்டுள்ளது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 திதியின் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ட) பிரிவின் பிரகாரம் கம்பனியின் நிறுவன அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பாக பதிவுகள் திறைசேரியிடமும் மாகாண திணைக்களத்திடமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(எ) இன் பிரகாரம் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பாக விடயங்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும் கம்பனியின் 2017 தொடக்கம் 2020 க்கான கூட்டிணைந்த திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 பிரகாரம் கம்பனியின் சகல பதவிகளுக்காகவும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றும் சுற்றறிக்கை 9.14 பிரிவின் பிரகாரம் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 31 திசெம்பர் 2017 | | | | 31 திசெம்பர் 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் | உள்ள படியானவை | மிகை | பற்றாக் குறை | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் | உள்ள படியானவை | மிகை | பற்றாக் குறை |
| பதவிநிலை | 71 | 53 | 05 | 23 | 63 | 44 | 04 | 23 |
| பதவிநிலை அல்லாத | 588 | 526 | 46 | 108 | 410 | 396 | 35 | 49 |
| கனிஷ்ட | 755 | 1085 | 411 | 81 | 563 | 711 | 208 | 60 |
| | **1414** | **1664** | **462** | **212** | **1036** | **1151** | **247** | **132** |

கம்பனி 2016 ஆம் ஆண்டில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1036 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் ஊழியர்கள் எண்ணிக்கை 1414 ஆக காணப்பட்டதுடன் 378 ஊழியர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துக் காணப்பட்ட போதும் உண்மையில் ஊழியர்களின் எண்ணிக்கை 513 ஆனால் அதிகரித்துள்ளது.

(உ) 2017 திசெம்பர் 31 கம்பனியில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 462 ஆக காணப்பட்டிருந்துடன் மிகை ஊழியர்களிற்குள் 31 நிரந்தர ஊழியர்களும் 07 அமைய ஊழியர்களும் மற்றும் 424 நாளாந்த கூலி அடிப்படையிலான ஊழியர்களும் காணப்பட்டுகின்றனர். பதவியணி நிர்வாகத்தின் படி அன்றைய தினத்தில் கம்பனியின் வெற்றிடம் 212 ஆகியது. கம்பனியின் நிர்வாக பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் உள்ளகக்கணக்காய்வு பிரிவு உட்பட அனைத்து பிரிவுகளிலும் நாளாந்த கூலி அடிப்படையிலான ஊழியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தன.

**4.6 சந்தைப்படுத்தல் பங்கு**

கம்பனியின் சந்தைப்படுத்தல் பங்கினை தீர்மானிப்பதற்கு தற்போதைய சந்தைப்படுத்தல் பங்கு தொடர்பாக ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தியினை அடைவதற்கான நோக்கங்கள்**

ஐக்கிய தேசியத்தின் ‘‘2030 நிகழ்ச்சித்திட்டத்தின்’’ நிலைபேறான அபிவிருத்தி பற்றிய செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களும் செயற்பட வேண்டும். ஆனால் இக்கம்பனியானது மீளாய்வாண்டில் நோக்கங்களையும் இலக்குக்களையும் அடைவதற்கு ஐக்கிய தேசியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை கருத்தில் கொண்டிருக்கவில்லை.

மேலே குறிப்பிட்ட ஐக்கிய தேசியத்தின் 2030 நிகழ்ச்சித்திட்டத்தினை கருத்தில் கொள்ளாமல் கம்பனியானது நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் இவ் இலக்குக்களை எவ்வாறு அடைந்து கொள்வது பற்றியும் மற்றும் இவ் இலக்குக்களை கணிப்பிடுவதற்கு குறிகாட்டிகளை எவ்வாறு பயன்படுத்துவது பற்றியும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் கட்டுமானம் தொடர்பான நடைமுறைகள்

#### 6.1.1 பெறுகை நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் கம்பனியினால் எதிர்கால விற்பனைக்காக வெளிநபர்களிடமிருந்து 13,515.52 மெட்ரிக் தொன் உப்புக்கள் ரூபா. 268,637,460 பெறமதியில் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக எந்தவிதமான உற்பத்தி ஆராய்ச்சிகளோ சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிகளோ மற்றும் தேவையான ஆராய்ச்சிகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சரியான முறையில் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டு இருந்ததுடன் பெறுகை நடைமுறைகள் ஆரம்பிப்பதற்கு முன்பு இருந்தே கம்பனிக்கு உப்புத் தொகையை பெற்றுக் கொள்வதில் கருத்து வேறுபாடுகள் நிலவியிருந்தது.

(ii) தெரிவு செய்யப்பட்ட வளங்களுடைய உப்பு மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட பொழுது அவை சரியான தரத்திற்கு ஏற்ப இருப்பதாக இராசயன பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்ட போதும் இருப்புக்களின் உப்பு பெற்றுக் கொண்ட பின்பு மாதிரி பரிசோதனையின் படி, 03 சந்தர்ப்பங்களில் ஜிப்சம் மற்றும் கடல் சிப்பிகள் அடங்கி உள்ளது என்றும் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் 02 உப்பு இருப்பு அட்டிகளில் சேறு அடங்கி இருந்தது என்றும் மற்றும் இன்னும் இரண்டு அட்டிகள் 2017 திசெம்பர் 31 வரை எந்தவிதமான இராசயானப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரியவந்திருந்தன.

(iii) சரியான தரமின்றிய உப்புக்கள் 13,515.52 மெட்ரிக் தொன் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரைக்கு ரூபா.207,558,660 பெறுமதியான கொள்வனவு செய்யப்பட்டதுடன் உப்புக்கள் 10,859 மெட்ரிக் தொன் கம்பனியினால் இறுதி இருப்பினுள் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகையும் மழைக்குள் அகப்பட்டு அழிவடைந்து கொண்டு இருந்தது என்று பௌதீக பரிசோதனையின் போது தெரிய வந்திருந்தன.

(iv) கம்பனியானது பெறுகைக்குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியவற்றின் நடவடிக்கையினை கருத்தில் கொள்ளாமல் தரமற்ற உப்புக்களை கொள்வனவு செய்துள்ளதுடன் அவ் ஒப்பந்தத்திற்கான மொத்த தொகையான ரூபா. 268,637,460 இனையும் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 6.2 காலங்கடந்த செயற்திட்டம்

2012ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே கட்டடத்தினை கட்டுவதற்கான செலவினமாக ரூபா.1,239,749 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இக்கட்டடத்திற்கான கட்டுமானப் பணியானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாமல் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கம்பனியின் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிக் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பெறுகை நடைமுறைகள் | வெளிநபர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் உப்புக்களின் இருப்புத் தொடர்பாக முறையான கொள்வனவுக் கட்டுப்பாடுகள் மற்றும் பெறுகை நடைமுறைகள் கடைப்பிடிக்கவில்லை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | கம்பனியினால் ஊழியர் தொடர்பான முறையான நிர்வாகச் செயற்பாடுகள் கடைப்பிடிக்கப்படவில்லை. |